பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*

**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# Tribal Worship Patterns and Ritualistic Elements of Tamil Nadu

**A. Deepika,** Research Scholar of Tamil, Reg. No.: 20PHTMF008, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996**
**Dr. C. Priyadharshini,** Associate Professor of Tamil & Head, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502**
**DOI: 10.5281/zenodo.20840701**

## Abstract

*This paper analyses the unique worship patterns and interconnected ritualistic elements of the tribal communities of Tamil Nadu from an anthropological perspective, elucidating how the primitive nature and animistic worship of these indigenous people evolved into clan-deity (Kula-deivatham) worship. Utilising drawing on ethnographic data embedded in contemporary Tamil novels such as Sholagar Thotti, Kaanagan, Vanam, and Paalkoodaram as primary sources, this study examines the worship systems of the Sholagar, Irular, Paliyar, and Kurumba tribes. The narrative accounts in these novels confirm that an institutionalised monotheistic religious state has not yet fully emerged among these tribes, and they continue to coexist within a synthesis of nature, animism, and polytheism. Furthermore, the study identifies that worship practices such as the Jadaisamy worship (Sholagar) and the sacred boundaries of Palichiamman (Paliyar) instill a profound ecological ethics within these communities—decreeing that not even a single twig should be misappropriated from the forest beyond one's bare needs; similarly, traditions like the 'rejuvenation ritual' of the Alu Kurumbas and the Kumba Devaru worship performed inside caves manifest tribal customs aimed at preserving the latent power of ancestral spirits from dissipating. From an anthropological viewpoint, since a woman is regarded as a symbol of fertility, the direct correlation established between nature and women during rain rituals represents the manifestation of a collective 'homoeopathic magic' mindset, believing it will induce rainfall to make the forest flourish. Hence, this study establishes that tribal worship systems are not mere superstitions but they are rather collective cultural values of sharing, gratitude, social security and environmental conservation. It further demonstrates that contemporary novels serve as exemplary ethnographic documentation of these rare primitive remnants and rituals.*

**Keywords:** Tamil Nadu Tribes, Worship Methods, Ritual Elements.

## References

[1] Antisha, M., and Jo. Benny. "Ko. Ma. Gothandam Padaippukalil Paliyar Inavaraviyal." *International Jouirnal of Tamil Language and Literary Studies*, Volume 5, Issue 2, Jan. 2023, p. 28. DOI: 10.5281/zenodo.7591259.
[2] Attanathi. *Paal Koodaram*. Thamarai Publications, 2020.
[3] Attanathi. *Vanam*. Ethir Veliyedu, 2018.
[4] Santhiya, S., et al. "Suzhaliyal Penniya Nokkil Solagar Thotti." *Tamilmanam Sarvathesa Tamil Aayvuthal*, Volume 12, Issue 1, June 2026, p. 297. DOI: 10.63300/tm12012026.22.

[5] Saravanakumar, Lakshmi. *Kanagan*. Ezhuthu Piracuram, 2019.
[6] Suresh, Pe. "Vettakkadu Irularkalin Vazhipattu Muraikal." *Pathivukal (Geotamil)*, 27 Apr. 2019. www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/5093-2019-04-27-05-43-39 Accessed 25 Mar. 2026.
[7] Nanjappan, Na. "Palangudiyinar Panpadu." *Kannottam*, 10 Feb. 2008. www.kannottam.com/2008/02/blog-post_4850.html?m=1 Accessed 25 Mar. 2026.
[8] Bharathi, Bhaktavatsala. *Thamizhaga Palangudigal*. Adaiyalap Pathippagam (ICR), 2003.
[9] Bharathi, Bhaktavatsala. *Panpaattu Manidaviyal*. Meyyappan Pathippagam, 2009.
[10] Balamurugan, Su. *Solagar Thotti*. Ethir Veliyedu, 2015.
[11] Balamurugan, Sa. "Palangudi Mathipeedugal Nambikkaigal." *Ungal Noolagam*, Jan.–Feb. 2008. www.keetru.com/ungal_noolagam/jan08/balamurugan.php Accessed 25 Mar. 2026.
[12] Maheswaran, Si. *Panpaattu Aayviyal (Panpaattiyal Kuriththa Muzhuthalaviya Paarvai)*. Bharathi Puthakalayam, 2023.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்



**Pandian Tamil Journal of Temple Studies**
*A Peer-Reviewed Journal*
**Volume 6, Issue 2, May 2026** **E-ISSN: 2583-0880**
**MLA, DOAJ Indexed**

# தமிழகப் பழங்குடிகளின் வழிபாட்டு முறைகளும் சடங்கியல் கூறுகளும்

**ஆ. தீபிகா,** முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவுஎண்: 20PHTMF008, தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-0444-7996**
**முனைவர் ச. பிரியதர்ஷினி,** இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்,தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0009-0009-1121-5502**

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழகப் பழங்குடியின மக்களின் தனித்துவமான வழிபாட்டு முறைகளையும் அவர்தம் வாழ்வியலோடு பிணைந்துள்ள சடங்கியல் கூறுகளையும் மானிடவியல் நோக்கில் ஆராயும் இக்கட்டுரை, தொல் மக்களின் இயற்கை மற்றும் ஆவி வழிபாடுகள் எங்ஙனம் குலதெய்வ வழிபாடாகப் பரிணமித்தன என்பதை விளக்குகிறது. சமகாலத் தமிழ் இலக்கியப் பதிவுகளான 'சோளகர் தொட்டி', 'கானகன்', 'வனம்', மற்றும் 'பால்கூடாரம்' ஆகிய புதினங்களில் இடம்பெற்றுள்ள இனவரைவியல் தரவுகளை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு, சோளகர், இருளர், பளியர் மற்றும் குறும்பர்களின் வழிபாட்டு முறைகளை இவ்வாய்வு பகுப்பாய்வு செய்கிறது. இப்பழங்குடிகளிடம் 'ஒரு கடவுள் வழிபாடு' என்ற நிறுவனமயப்பட்ட சமய நிலை இன்னும் முழுமையாக உருவாகவில்லை என்பதையும், அவர்கள் இயற்கை, ஆவி, பல கடவுள் வழிபாட்டின் கூட்டு நிலைகளிலேயே இன்றும் வாழ்கின்றனர் என்பதையும் புதினப் பதிவுகள் உறுதி செய்கின்றன. மேலும், ஜடைசாமி வழிபாடு (சோளகர்), பளிச்சியம்மன் எல்லை (பளியர்) போன்ற வழிபாடுகள், தங்களின் தேவைக்குக் கூடுதலாகக் காட்டின் ஒரு பகுதியையும் அழியாமல் காக்க வழிவகைச் செய்கின்றது. ஆலுக்குறும்பர்களின் 'மறுஉயிர்ப்புச் சடங்கு' மற்றும் குகைக்குள் நிகழும் 'கும்ப தேவரு' வழிபாடுகள் வழி ஆவிகளின் ஆற்றல் சிதையாமல் காக்கப்படும் பழங்குடி மரபுகள் வெளிப்படுகின்றன என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. பழங்குடியினரின் வழிபாட்டு முறைகள் என்பவை வெறும் மூடநம்பிக்கைகள் அல்ல, அவை பகிர்தல், நன்றியுணர்வு, சமூகப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றின் கூட்டுப் பண்பாட்டு விழுமியங்களாகும் . சமகாலப் புதினங்கள் இத்தகைய அரிய தொல் எச்சங்களையும் சடங்குகளையும் ஆவணப்படுத்தும் சிறந்த இனவரைவியல் சான்றுகளாகத் திகழ்கின்றன என்றும் இவ்வாய்வு நிறுவுகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** தமிழகப் பழங்குடிகள், வழிபாட்டு முறைகள், சடங்கியல் கூறுகள்.

**முன்னுரை**

தமிழகப் பழங்குடியினரின் வழிபாட்டு முறைகளையும் அவர்தம் வாழ்வியலோடு பிணைந்துள்ள சடங்கியல் கூறுகளையும் மானிடவியல் நோக்கில் ஆராயும் இக்கட்டுரை, சமகாலத் தமிழ் இலக்கியப் பதிவுகளான *'சோளகர் தொட்டி'*, *'கானகன்'*, *'வனம்'*, மற்றும் *'பால்கூடாரம்'* ஆகிய புதினங்களில் இடம்பெற்றுள்ள இனவரைவியல் தரவுகளை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு அமைகிறது. இயற்கையின் பேராற்றல் மீதான அச்சமும் மூதாதையர் மீதான நன்றியுணர்வும் எங்ஙனம் தொல் மக்களின் இயற்கை மற்றும் ஆவி வழிபாடுகளைக் குலதெய்வ வழிபாடாகப் பரிணமிக்கச் செய்தன என்பதை விளக்கும் இவ்வாய்வு, இப்பழங்குடிகளிடம் இன்னமும் நிறுவனமயப்பட்ட ஒரு கடவுள் வழிபாட்டு நிலை

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

முழுமையாக ஏற்படவில்லை என்பதைச் சான்றாதாரங்களுடன் நிறுவுகிறது. மேலும், சோளகர்களின் 'ஜடைசாமி', பளியர்களின் 'பளிச்சியம்மன்' எல்லை போன்ற வழிபாடுகள் வழி வெளிப்படும் சூழலியல் அறத்தையும், ஆலுக்குறும்பர்களின் 'மறுஉயிர்ப்புச் சடங்கு' போன்ற கமுக்கமான சடங்குகளையும் இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கின்றது. வளமையின் குறியீடான பெண்கள் மட்டுமே பங்கேற்கும் சோளகர்களின் 'எங்கு சீர்குட்டை' மழைச் சடங்கின் பின்னணியிலுள்ள கூட்டு மனநிலையையும் விரிவாக விளக்கி, இப்பழங்குடி வழிபாடுகள் அனைத்தும் வெறும் மூடநம்பிக்கைகள் அல்ல, மாறாக அவை காடு மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கான கூட்டுப் பண்பாட்டு விழுமியங்கள் என்பதைப் பறைசாற்றுகிறது.

**வழிபாடு.**

இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த பழங்கால மனிதர்கள் இயற்கையின் ஆற்றல் மீது கொண்ட அச்சவுணர்வே அவர்களை இயற்கை வழிபாட்டிற்குத் தூண்டியது.இடி , மின்னல் , சூறாவளி, தீடீர் காட்டாற்று வெள்ளம், இயற்க்கைச் சீற்றம் ஆகியவற்றைக் கண்டு தொன்மக்கள் அஞ்சினர்.அவ்வாறு தங்களை அச்சுறுத்தி வந்த இயற்கையையும், தங்கள் மூதாதையரையும் தங்கள் வாழ்விற்குத் துணைபுரிய வேண்டி வழிபட தொடங்கினர்.இறந்த மூதாதையரின் ஆற்றலும் அனுபவமும் தங்கள வாழ்வை செழுமைப்படுத்தும் என்ற நம்பிக்கையில் மூதாதையரை மக்கள் வழிபடுகின்றனர்.தங்கள் மூதாதையரை அவர்கள் வழிப்பட்ட ஆவி வழிபாட்டு முறையே பின்னாளில் சமய வழிபாட்டிற்கு வழிகோலியது என்று அறிய முடிகின்றது.தொன்மக்கள் தங்கள் இஷ்ட தெய்வங்களுக்கும் இயற்க்கைக்கும் படையலிட்டு வழிபட்டனர். அவ்வாறு தங்கள் விருப்பப் பொருட்களைக் கொண்டு படையலிட்டு வழிபடுவதன் மூலம் தெய்வங்களை மகிழ்விக்க முடியம் என்றும் , இயற்க்கையை சாந்திப்படுத்த முடியும் எனவும் நம்பினர்.

> **ஆவி வழிபாடு என்ற தொல் நிலையில் தோன்றிய சமய நம்பிக்கை , மெல்ல மெல்ல அதன் படிமலர்ச்சி நிகழ்வில் இறுதியாக ஒரு கடவுள் வழிபாடு என்ற உச்ச நிலையை அடைந்தது.அவ்வளர்ச்சி நிலைகளுக்கேற்பவே மக்களின் வளர்ச்சி நிலையும் அமைந்துள்ளது என்பார் டைலர்.(பண்பாட்டு மானிடவியல் ப-597)**

இதன் மூலம் தொல் சமூகத்தின் சமய படிமலர்ச்சியை அறிய முடிகின்றது.சமயங்களும் , ஆவி வழிபாடுகளுமே சடங்குகளின் தோற்றுவாயாக அமைந்தன எனலாம். சமயங்களின் வளர்ச்சி நிவையை பின்வரும் அட்டவணையின் மூலம் அறியலாம்.

**இயற்க்கை வழிபாடு (படையலிட்டு வழிபடுவதற்குத் தோற்றுவாய்)**

⇩

**ஆவி வழிபாடு (மூதாதையர் வழிபாடு).**

⇩

**பல கடவுள் வழிபாடு (வழிபாட்டுச் சடங்குகள்)**

⇩

**ஒரு கடவுள் வழிபாடு**

இயற்கை வழிபாடு தொடங்கிய போதே மனிதன் படையலிட்டு வழிபடும் சடங்கை தொடங்கினான். அதனைத் தொடர்ந்து ஆவி வழிபாடுகளே மந்தரித்தல் பேயோட்டுதல் முதலிய சடங்குகளுக்குத் தோற்றுவாயாக அமைந்தன. பழங்குடியின மக்கள் வழிபாட்டு

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

முறையானது இயற்கை வழிபாடு, ஆவி வழிபாடு, பல கடவுள் வழிபாடு என்னும் மூன்று வழிபாட்டு முறைகளையும் சடங்கு முறைகளையும் உள்ளடக்கியது.பழங்குடியினர் வழிபாட்டு முறைகளில் ஒரு கடவுள் வழிபாட்டு நிலை இன்னமும் ஏற்படவில்லை என்பதனை புதினங்கள் வாயிலாக அறிய முடிகின்றது.

பழங்குடியின மக்கள் வழிபாட்டு முறையானது அவர்கள் சார்ந்திருக்கும் சுற்றுச்சூழலையும் மரபார்ந்த பண்பாட்டுக் கூறுகளையும் இணைக்கும விதத்தில் அமைந்துள்ளது. பழங்கடியினர் வழிபாட்டு முறையனது பகிர்வு, நன்றியுணர்வு, நம்பிக்கை, பாதுகாப்பு போன்ற எண்ணங்களின் கூட்டு மனநிலையில் நடைபெறுகின்றன. பழங்குடியினர் வழிபாட்டு முறையானது மூன்று வகையாக இணங்கானப்படுகிறது.

- **இயற்கை வழிபாடு**
- **மூதாதையர் வழிபாடு**
- **கிராம, சமூக அளவில் வழிபடும் கிராம தெய்வங்கள்.**
- **பிற இந்து சாதிச் சமூகங்கள் வழிபடும் தெய்வ வழிபாட்டு முறை. (தமிழ்நாட்டு பழங்குடிகள், ப. 105)**

பழங்குடி மக்களின் வழிபாட்டு முறைகள் யாவும் அவர்களின் வாழ்விடச் சூழலோடும், இயற்கையோடும் பிரிக்க முடியாதபடி பிணைந்துள்ளதை மேற்கண்ட காரணிகள் உணர்த்துகின்றன. தங்கள் வாழ்வாதாரமாக விளங்கும் காடுகளையும், வனப்பகுதிகளையும் வெறும் நிலப்பரப்பாகப் பார்க்காமல், அவற்றை வழிபாட்டிற்குரிய தெய்வமாகவே கருதுவது இவர்களின் முதன்மை மரபாகும் .

> **பழங்குடிகள் தங்களின் மூதாதையரின் ஆவிகள் வனத்தைக் காப்பதாகவும் சிலவகை மரங்களை அழித்தால் தங்களின் மூதாதையருக்குக் கோபம் வந்துவிடுமென்றும் நம்புகின்றார்கள். பல சமயம் விலங்குகளையும் கடவுளின் அவதாரமாகப் பார்ப்பதுண்டு. (பாலமுருகன், ச, பக்.01)**

பழங்குடிச் சமூகங்கள், தாங்கள் வாழும் ஒட்டுமொத்த வனப்பகுதியுமே வனதேவதையின் ஆளுகைக்கு உட்பட்ட புனிதமான எல்லை என்று மனதார நம்புகின்றனர். இத்தகைய அசைக்க முடியாத இயற்கை வழிபாட்டுத் தத்துவத்திற்குச் சான்றாக 'கானகன்' புதினம் விளங்குகிறது இப்புதினத்தில் இடம்பெறும் பளியர் பழங்குடியினர், தங்களின் ஒட்டுமொத்த வனப்பகுதியும் **'பளிச்சியம்மன்'** என்னும் தங்களின் குலதெய்வத்தின் எல்லைக்கு உட்பட்டது என்ற ஆழமான நம்பிக்கையைக் கொண்டுள்ளனர்.

> **இறந்து போன முன்னோர்கள் ஆவிவடிவில் வனத்தில் வாழ்வதாக பழங்குடியினர் நம்புகிறார்கள். தலைமுறை தலைமுறையாக வனங்களில் வாழ்ந்த தங்களது முன்னோர்கள் வனத்திலே தெய்வங்களாக இருந்து தங்களைக் காத்து வருகின்றார்கள் எனற நம்பிக்கை இவர்களிடம் வலுவாக இருக்கின்றது. காடு, மலையை விட்டு வெளியேற ஒரு போதும் விரும்பாதவர்களாக, இயற்கையின் அங்கமாக உள்ளனர். (நஞ்சப்பன், ந. பக்.10)**

இந்த தெய்வீக நம்பிக்கை, காட்டை வெறும் வழிபாட்டு இடமாக மட்டும் நிறுத்தாமல், அதனை அச்சத்தோடும் பக்தியோடும் பாதுகாக்கும் வாழ்வியல் நெறியாகவும் மாற்றுகிறது.

**மாதேஸ்வரன் கோயில் அமைவிடமும் இயற்கை வழிபாடும்**

சோளகர்களின் வழிபாட்டு மரபில் முக்கியத் தலமாக விளங்குவது **சோளகனை** என்னும் ஊரில் அமைந்துள்ள **படகல் மாதேஸ்வரன் கோயில்** ஆகும். இக்கோயில் இயற்கையோடு இயைந்த பழங்குடியினரின் வழிபாட்டுத் தத்துவத்திற்குச் சிறந்த சான்றாகத்

திகழ்கிறது. அடர்ந்த இயற்கைச் சூழலில், இரு பெரும் பாறைகளுக்கு இடையில் இயற்கையாகவே அமைந்திருக்கும் லிங்கம் போன்ற கல் வடிவமே இங்கு மாதேஸ்வரனாகக் கருதி வழிபடப்படுகிறது. இத்தகு ஆன்மீகச் சிறப்பு மிக்க படகல் மாதேஸ்வரன் கோயிலில் ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே திருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இத்திருவிழாக் காலத்தில் சிதறிக் கிடக்கும் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து தங்கள் குலதெய்வத்திற்கு வழிபாடுகளைச் செலுத்துகின்றனர். பாறைகளுக்கு இடையே உள்ள கல்லை இறைவனாகக் கருதும் இம்முறை, பழங்குடி மக்களின் 'சுயம்பு' மற்றும் நடுகல் வழிபாட்டு மரபின் எச்சத்தை நமக்கு உணர்த்துகிறது. அடர் வனத்தில் அமைந்துள்ள இக்கோயில் திருவிழா, பழங்குடிச் சமூகமான சோளகர்களும், அவர்தம் அண்டைச் சமூகமான லிங்காயத்துகளும் இணைந்து கொண்டாடும் ஒரு கூட்டு வழிபாட்டுத் தளமாக விளங்குகிறது. இத்திருவிழா இரு வேறுபட்ட பண்பாட்டு மரபுகள் ஒரே புள்ளியில் இணையும் சமூக நிகழ்வாக அமைகிறது.

**மணிராசன் வழிபாடு**

சோளகர் தொட்டி மக்களின் ஆகச்சிறந்த காவல் தெய்வமாகவும், அவர்களின் முன்னோர் வழிபாடு நிகழும் புனிதத் தலமாகவும் மணிராசன் கோயில் திகழ்கிறது. இக்கோயில் வெறும் வழிபாட்டு மையமாக மட்டுமன்றி, அம்மக்களின் வாழ்வியலைத் தீர்மானிக்கும் அறநெறியின் மையமாகவும் விளங்குகிறது. சமுதாய நீதி நெறியிலிருந்து எவரேனும் தவறினால், அவர்கள் மணிராசனின் தெய்வீகத் தண்டனைக்கு உள்ளாவார்கள் என்ற அச்சமும் ஆழமான நம்பிக்கையும் இச்சமூகத்தினரிடம் வேரூன்றியுள்ளது.

> **சிக்குமாதா அவனது கோல்காரத் தந்தைக்கு உதவியாக விரதமிருந்து கோலப் பராமரித்து மணிராசன் திருவிழாக்களில் நிற்பான். (சோளகர் தொட்டி, ப. 35)**

மணிராசன் கோயில் திருவிழா, மிகக் கடுமையான ஆன்மீகக் கட்டுப்பாடுகளையும் மரபு வழி விதிகளையும் கொண்டததிருவிழாக் காலத்தில் ஊர்ப் பொறுப்பாளர்கள் அனைவரும் பத்து நாட்கள் தூய்மையோடு பூசைகள் செய்து, கடுமையான விரதத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். குறிப்பாக, வழிபாட்டு முறைகளையும் சமூகக் கட்டுப்பாட்டையும் முன்னின்று நடத்தும் '**கோல்காரர்**' எவ்வித சமரசமுமின்றி மிகக் கடுமையான கட்டுக்கோப்புடன் விரதம் இருக்க வேண்டியது கட்டாயமாகும். இத்திருவிழா வழிபாடுகளில் ஏதேனும் சிறு தவறு நேர்ந்தாலோ அல்லது கோல்காரர் உள்ளிட்ட ஊர்ப் பொறுப்பாளர்கள் விரதக் கட்டுப்பாட்டைத் தவறினாலோ, அது தீட்டாகிவிடும் (வழிபாடு நிறைவடையாது) என்பது இச்சமூகத்தின் மாறாத விதியாகும்.

**எங்குசீர்குட்டை: சோளகர்களின் மழைத் தெய்வ வழிபாடு**

சோளகர் பழங்குடிகளின் வாழ்வியலில் இயற்கைச் சமநிலையைப் பேணவும், வளம் பெருகவும் நிகழ்த்தப்படும் முதன்மையான வழிபாடுகளில் '**எங்குசீர்குட்டை**' வழிபாடு முக்கிய இடத்தைப் பெறுகிறது. இச்சமூகத்தினர் 'எங்குசீர்குட்டை' என்னும் பெண் தெய்வத்தைத் தங்களின் **மழைத் தெய்வமாகப்** போற்றிப் பரவுகின்றனர்.

> **பழங்குடியினரின் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் அனைத்தும் இயற்கையைச் சுரண்டும் நோக்கம் கொண்டவை அல்ல; மாறாக, அவை இயற்கையைத் தாயாகவும், தங்களை அதன் குழந்தைகளாகவும் கருதி வழிபடப்படும் உன்னத வழிபாடுகளாகும். சோளகர் தொட்டி நாவலில் வரும் 'மழைச்சடங்கு' இதற்கு ஒரு சிறந்த சான்றாகும். மழை பொய்த்துப் போய், காட்டின் பல்லுயிரச் சமநிலை குலையும்போது, சோளகப்**

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

> **பெண்கள் தங்களின் முக்கிய இயற்கை வழிபாட்டுத் தலமான 'எங்கு சீர்குட்டை' தெய்வத்தை நோக்கிச் சடங்குகளை நடத்துகின்றனர். (சந்தியா,எஸ்.பக்.297)**

காட்டின் ஆழத்தில் அமைந்துள்ள **தான்றி மரத்தை** இத்தெய்வத்தின் உறையிடமாகக் கருதி, அதற்குச் சிறப்புப் பூசைகள் செய்து சோளகர்கள் மழை வேண்டி வழிபடுகின்றனர். இயற்கையின் செழுமையையும் உற்பத்தியையும் போற்றும் இவ்வழிபாட்டு நிகழ்வில் ஆண்களுக்குப் பங்கேற்க அனுமதி மறுக்கப்படுகிறது. முற்றிலும் பெண்களால் மட்டுமே முன்னின்று நடத்தப்படும் இவ்வழிபாட்டில், சோளகப் பெண்கள் மட்டுமே பிரத்யேகமாகப் பங்கேற்றுத் தங்கள் குல மரபுச் சடங்குகளை நிகழ்த்துகின்றனர்.

உலகெங்கிலும் உள்ள பழங்குடி இனங்களின் மரபில், மழையும் நிலமும் பெண்ணியத் தன்மையோடு ஒப்பிடப்படுவதன் நீட்சியைச் சோளகர்களின் இந்த 'எங்குசீர்குட்டை' வழிபாட்டிலும், தான்றி மர வழிபாட்டு முறையிலும் நாம் துல்லியமாகக் காண முடிகிறது.

> **பெண்கள் தலையில் சுமந்த உணவுடன் வனத்தின் எல்லைக்கு அப்பால் சில தூரம் உள்ளே சென்று அங்கிருந்த உயர்ந்த மரத்தினைச் சுற்றி தங்களின் உணவுகளை வைத்தார்கள்.அந்த இடம் மரங்கள் அடர்ந்த இடம்.பின் தங்களின் உடலிலிருந்த சேலைகளையும் உள்ளாடைகளையும் களைந்து அனைவரும் நிர்வானமாக நின்றார்கள். ஆதன் பின்பு அதே நிலையில் வானத்தைப் பார்த்து "மழை பொழி தாயே"என்று எங்குசீர்குட்டை தெய்வத்தை வேண்டினார்கள்.வட்டமாக கும்மியடித்தார்கள்.ஒருவர் மாறி ஒருவர் பாடினார்கள்.அந்தக் கும்மியானது எங்குசீர்குட்டை தெய்வம் மனம் குளிர நடந்தது. (சோளகர் தொட்டி ப-48)**

சோளகப் பெண்கள் தங்களின் கூடைகளில் பாரம்பரிய உணவுப் பொருட்களைச் சுமந்து சென்று, காட்டின் புனிதப் பகுதியில் வைத்து தெய்வத்திற்குப் படைத்து, பின் அதனைத் தங்களுக்குள் பகிர்ந்து உண்கின்றனர். உணவருந்திய பின், இயற்கையோடு தங்களை முழுமையாக ஒடுக்கும் ஆன்மீகக் குறியீடாகப் பாரம்பரிய நடனங்களை ஆடுகின்றனர். இதன் உச்சகட்டமாக, மழையையும் நிலத்தையும் செழுமைப்படுத்தும் தொல்மரபுச் சடங்கின் நீட்சியாக, ஆடைகளின்றி நிர்வாண நடனமாடி வழிபாட்டை நிறைவு செய்கின்றனர். இயற்கையின் அதியுன்னத ஆற்றலோடு நிகழும் இந்த அந்தரங்கமான சடங்கு முறை மற்றும் வழிபாட்டு ரகசியங்களை, சோளகப் பெண்கள் தங்கள் சமூகத்து ஆண்களிடம்கூடப் பகிர்வதில்லை,முற்றிலும் ரகசியமாகவே பேணுகின்றனர்.

**இருளர்களின் வெள்ளியங்கிரி ஈசன் வழிபாடு**

கோவை வட்டத்தில் வாழும் தாணிக்கண்டி இருளர்களின் ஆன்மீக வழிபாட்டு மரபில், வெள்ளியங்கிரி ஈசன் முதன்மையான குலதெய்வமாகத் திகழ்கிறார். காடும் மலையுமே தங்களின் வாழிடமாகக் கொண்ட இருளப் பழங்குடிகள், வெள்ளியங்கிரியின் கரடுமுரடான ஏழு மலைகளையும் கடந்து சென்று, உச்சியில் வீற்றிருக்கும் ஈசனைத் தங்களின் தொல்மரபு மாறாமல் பக்திப் பெருக்கோடு வழிபடுவதைப் பெருவழக்காகக் கொண்டுள்ளனர்.

> **கோவை மாவட்டம் பூண்டியில் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் புகழ்பெற்ற வெள்ளிங்கிரி ஆண்டவர் கோவில் உள்ளது. தென்திருக்கைலாயம் என்று அழைக்கப்படும் இந்த வழிபாட்டு தலத்திற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் வந்து வழிபாடு செய்துவிட்டு செல்கிறார்கள். இந்த வழிபாட்டு தலத்தில் மலைவாழ் மக்களின் பங்களிப்பு அதிகமாகக் காணப்படுகிறது, குறிப்பாக இருளர் மக்களின் பங்களிப்பு அதிகமாகக் காணப்படுகிறது. வெள்ளியங்கிரி ஆண்டவர் தரிசனம் அவர்களின் முக்கியமான வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகக்**

> **கருதப்படுகிறது.இந்த வழிபாட்டுத் தலத்தில் சித்ரா பவுர்ணமி விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்படுகிறது. (சுரேஷ், பெ. பக். 03)**

வெள்ளியங்கிரி கோயில் திருவிழாக் காலங்களில் இருளர்களின் பங்களிப்பு வழிபாட்டோடு மட்டுமன்றி, சமூகப் பொறுப்போடும் இணைகிறது. ஏழு மலைகளின் செங்குத்தான பாதைகளையும், அடர்ந்த வனச் சூழலையும் நன்கு அறிந்தவர்களான இருளர்கள், திருவிழாக் காலத்தில் வெள்ளியங்கிரிக்கு வரும் லட்சக்கணக்கான பக்தர்களுக்குப் பெரும் துணையாக விளங்குகின்றனர்.அசாத்தியமான தங்களின் மலைப் பயண அனுபவத்தைக் கொண்டு, கடினமான பாதைகளில் பக்தர்களைப் பாதுகாப்பாக வழிநடத்துவதிலும், மலையேற்றத்தின் போது அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குவதிலும் தாணிக்கண்டி இருளர்கள் முதன்மைப் பங்கு வகிக்கின்றனர். மலையையும் இறைவனையும் ஒன்றாகக் கருதும் இருளர்களின் இந்த மரபு, தங்களின் வழிபாட்டுத் தெய்வத்திற்குத் தொண்டு செய்வதோடு மட்டுமல்லாமல், அத்தெய்வத்தைத் தேடி வரும் மனிதர்களுக்கும் வழிகாட்டும் உன்னதமான பழங்குடிப் பண்பாட்டின் நீட்சியாகும்.

**காளியம்மன் கோயில்: அமைவிடமும் வழிபாட்டுச் சிறப்பும்**

தாணிக்கண்டியிலிருந்து சாடிவயல் செல்கின்ற வழித்தடத்தில், இயற்கைச் சூழலுக்கு நடுவே அமைந்துள்ள வீரகாளியம்மன் கோயில் இப்பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலமாக விளங்குகிறது. இப்பழங்குடி மக்களின் ஆன்மீகப் புகலிடமாகவும், குலப் பாதுகாப்பு அரணாகவும் இத்தெய்வம் போற்றப்படுகிறது.

வீரகாளியம்மன் திருவிழாவின் முதன்மை நிகழ்வாகப் பூசாரி அருள்வந்து மக்களுக்கு மங்கலமான அருள்வாக்குகளைக் கூறுகிறார். ஊரிலுள்ள மக்கள் அனைவரும் திரண்டு வந்து பூசாரியிடம் தங்களின் வாழ்வியல் நலம் குறித்துக் கேட்டு, மனநிறைவோடு அருளாசி பெறுகின்றனர். திருவிழாக் காலத்தில் அக்கிராமத்து (பதியின்) குடிகள் அனைவரும் ஒன்று கூடி, பாரம்பரிய இசைக்கு ஏற்ப ஆடிப்பாடித் தங்களின் எல்லையற்ற மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். குறிப்பாக, பழங்குடிப் பெண்கள் வட்டமாக நின்று கும்மியடித்து, நாட்டுப்புறக் கலை மரபு மாறாமல் ஆடி மகிழ்வது விழாவின் முக்கியப் பண்பாட்டுக் கூறாகும்.விழாவைத் தலைமை தாங்கி நடத்தும் கோயில் பொறுப்பாளர்கள் அனைவரும், திருவிழாவை முன்னிட்டுப் பல நாட்கள் கடுமையான விரதமிருந்து, மிகுந்த ஆசாரத் தூய்மையோடு பாரம்பரியச் சடங்குகளை முறைப்படி செய்து முடிக்கின்றனர். பழங்குடிப் பண்பாட்டில் 'பதி' (கிராமம்) மக்களின் கூட்டு வழிபாடும், 'கும்மியாட்டம்' போன்ற குழு நடனங்களும் அவர்களின் சமூக ஒருமைப்பாட்டையும், வழிபாட்டுத் தூய்மையையும் பறைசாற்றும் முக்கியக் காரணிகளாகத் திகழ்கின்றன.

> **காப்புக் கட்டிக் கொண்டிருந்த சாத்தன் பால் பழம் தவிர எதுவும் உண்ணாமல் இருந்தவன்.படையல் வந்ததும் அம்மன் முன்னால் படையல் இட்டான்.அம்மனின் அழகையும் அருளாட்சி செய்யும் பண்பையும்; பூசாரி சாத்தன் பாடினான்.முத்துடைத்தலுக்குப் பின்பே அமுதம் எடுத்தல் என்னும் சடங்கு நடைபெறுகிறது. (வனம், பக். 120)**

சாமிக்கு மஞ்சள் பூசி அலங்காரம் செய்து வீடு வீடாக ஊர்வலமாகக் கொண்டு வருகின்றனர். இந்த வழக்கம் ஊர் மதித்தல் என்றழைக்கப்படுகிறது. திருவிழாவின் நிறைவாக பூசாரி, பக்தர்கள் கட்டிய காப்புத் துணி மற்றும் கயிறு அவிழ்க்கப்படுகிறது. திருவிழா ஆரம்ப நாள்முதல் கடைசி நாள் வரை ஆட்டம்பாட்டமாய் மகிழ்ச்சிப் பொங்க ஆரவாரமாய் நடைபெறுகின்றது.

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

**பெட்டக்குறும்பர்களின் குலதெய்வ மரபும் பொது வழிபாடும்.**

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டத்தின் தெப்பக்காடு பகுதியில், பெட்டக்குறும்பர் பழங்குடியினரின் முதன்மையான குலதெய்வமான **பொம்மதேவர் கோயில்** அமைந்துள்ளது. இயற்கையோடு இயைந்த தங்களின் தொல்மரபுச் சூழல் மாறாமல், இக்கோயிலின் சுவர்களை அம்மக்கள் மூங்கில் தடுப்புகளைக் கொண்டு அமைத்துள்ளனர். மேலும், விழாக்காலங்களின் போது செயற்கை அலங்காரங்களைத் தவிர்த்து, இயற்கையான மாவிலைத் தோரணங்களை மட்டுமே கட்டித் தூய்மையைப் பேணுகின்றனர். பொம்மதேவர் வழிபாட்டின் மையப்பொருள் மற்றும் அதன் அபிடேக முறைகள் பழங்குடியினரின் நடுகல் மற்றும் சுயம்பு வழிபாட்டின் எச்சங்களாகத் திகழ்கின்றன.

பொம்மதேவர் எவ்வித மானுட உருவமுமின்றி, இயற்கையான மூன்றடி உயரக் கற்சிலையாகச் சுயம்பு வடிவத்தில் வீற்றிருக்கிறார். வழிபாட்டின் தொடக்கமாக இக்கற்சிலைக்குத் தூய நீர் ஊற்றிக் கழுவி, பின்னர் எண்ணெய்க் காப்பிட்டு முறைப்படி அபிசேகம் செய்கின்றனர். அதன் பின் மீண்டும் நீர்வார்த்துத் தூய்மை செய்து, திருநீறு பூசி, சந்தனக் குங்குமத் திலகமிட்டுத் தெய்வ வடிவத்தை மங்கலமாக அலங்கரிக்கின்றனர். காட்டின் மீதான தங்களின் உரிமையையும் நன்றியையும் வெளிப்படுத்தும் விதமாக, காட்டில் பூக்கும் காட்டுமலர்களால் தொடுக்கப்பட்ட மாலைகளை அத்தெய்வத்திற்கு அணிவித்து, உதிரிப்பூக்களைத் தூவிப் போற்றுகின்றனர். நிறைவாக, பொம்மதேவருக்குப் புதிதாக நெய்யப்பட்ட வெள்ளைத் துண்டினை ஆடையாக அணிவித்துத் தங்களின் குலவழிபாட்டை முறைப்படி நிறைவு செய்கின்றனர்.

> **பூசாரி பூஜை பண்ணி பின் கற்பூரம் பற்ற வைத்து எரியும் சுடரில் தீபாராதனைக் காட்டினர். பொம்மதேவ என்று உச்சஸ்தாயில் எழுந்த சப்தப் பக்தி பெருவெள்ளம். (பால்கூடாரம், பக். 60)**

மூங்கில் சுவர்கள், காட்டுமலர் மாலைகள் மற்றும் உருவமற்ற கற்சிலை வழிபாடு ஆகிய கூறுகள், பெட்டக்குறும்பர்கள் தங்களின் பெருந்தெய்வ வழிபாட்டிற்குள்ளும் தங்களுக்குரிய தனித்துவமான இயற்கை சார்ந்த தொல் வழிபாட்டு அடையாளங்களை அப்படியே தக்கவைத்துள்ளதை நமக்கு உணர்த்துகின்றன. பெட்டக்குறும்பர் பழங்குடிகளின் வழிபாட்டு முறை, தங்களின் தனித்துவமான குலதெய்வ வழிபாட்டையும் பெருந்தெய்வ வழிபாட்டையும் சம அளவில் பேணும் சமநிலைத் தன்மை கொண்டது. இச்சமூகத்தினர் பில்லே மாரியம்மா, பைரவா, பிசிலாட்டம்மா ஆகியோரைத் தங்களின் முதன்மையான குலதெய்வங்களாக ஏற்று, மரபு மாறாமல் வழிபட்டு வருகின்றனர். அதே வேளையில், தங்களின் குலதெய்வ எல்லைகளைத் தாண்டி கணேசர், ராமர், பசவண்ணா மற்றும் மாதேஸ்வரா போன்ற பொதுத் தெய்வங்களையும் பக்திப் பெருக்கோடு போற்றிப் பரவுகின்றனர்.

எல்லையோரக் காட்டுப் பகுதிகளில் வாழும் பெட்டக்குறும்பர்களின் வாழ்வியலில் தமிழக-கர்நாடகப் பண்பாட்டுக் கூறுகள் அழகாகக் கலந்துள்ளன. இவர்கள் தமிழகத்தின் முதன்மையான மற்றும் முக்கியத் திருவிழாக்கள் அனைத்தையும் தங்களின் வாழிடங்களில் முறைப்படி கொண்டாடி மகிழ்கின்றனர். அதே வேளையில், தங்களின் மொழி மற்றும் தொல்மரபுத் தொடர்பின் எச்சமாக, கன்னடப் புத்தாண்டான 'யுகாதி' பண்டிகையைத் தங்களின் மிக முக்கியப் பெருவிழாவாகக் கொண்டாடுவதைப் பாரம்பரிய வழக்கமாகக் கொண்டுள்ளனர். தங்களின் பிரத்யேகக் குலதெய்வங்களைப் பேணும் அதே வேளையில், பிராந்தியத் தெய்வங்களையும் அண்டை மாநிலப் புத்தாண்டு (யுகாதி) மரபையும் ஏற்றுப் பின்பற்றுவது,

பாண்டியன் கோவில் கலைகள் தமிழ் ஆய்விதழ்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் ஆய்விதழ்

Pandian Tamil Journal of Temple Studies
A Peer-Reviewed Journal
Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

பெட்டக்குறும்பர்களின் பன்பாட்டுப் பரவலாக்கத்தையும் அவர்களின் பன்முக அடையாளத்தையும் வெளிப்படுத்துகிறது.

**ஆலுக்குறும்பர்களின் கும்பதேவர் வழிபாடு**

ஆலுக்குறும்பர் பழங்குடிச் சமூகத்தின் ஆன்மீக மையமாகவும், அவர்தம் ஆகச்சிறந்த குலதெய்வமாகவும் **கும்பதேவர்** விளங்குகிறார். அம்மக்கள் இத்தெய்வத்தை அதீத பயபக்தியுடனும், வழிபாட்டுத் தூய்மையுடனும் போற்றி வருகின்றனர். இக்குலதெய்வ வழிபாட்டின் உச்சகட்டமாக விளங்குவது, உலகியல் தொடர்புகளிலிருந்து முற்றிலும் விடுபட்டு, காட்டின் அந்தரங்கப் பகுதியில் நிகழ்த்தப்படும் ஒரு கமுக்கமான (ரகசியமான) வழிபாட்டு மரபாகும்.

> **நீலகிரி மாவட்ட பழங்குடி குழுக்களுள் ஆலுக் குறுமர் தங்களது வழிபாட்டிற்குரிய கும்ப தேவரு எனும் சுடுமண் பானைகளைப் பாதுகாப்பாக இடும் புனித வைப்பிடமாக ஒவ்வொரு மரபார்ந்த குடியிருப்பின் புறவெளியில் அமைந்துள்ள குகையைக் கருதுவதுடன் இறந்தோர் ஆவி ஒட்டிக்கொண்டுள்ளதாக சாமியாடியால் அடையாளம் காட்டப்பட்ட ஆவியேறிய கற்களைப் பாதுகாப்பாக இட்டு வைத்திடும் (கொவெ மனெயாக விளங்கிடும்) பெருங்கற்காலக் கல் திட்டைகள் கல் வட்டங்கள் கற் குத்துகள் முதலியவற்றை புனித வைப்பிடமாகக் கருதுகின்றனர். (பண்பாட்டு ஆய்வியல் , பக். 209)**

இவ்வழிபாட்டுச் சடங்கு கடுமையான விரத நெறிகளையும், தொல்சமூக எச்சங்களையும் கொண்டு நிகழ்கிறது. ஆலுக்குறும்பர் சமூகத்தின் ஊர்த்துணைத் தலைவரான 'மண்ணுக்காரன்' மற்றும் சாமியாடியான 'ஜாத்தி' உள்ளிட்ட முக்கியப் பொறுப்பாளர்கள் மொத்தம் எழுவர் இவ்விழாவை முன்னின்று நடத்துகின்றனர். இவர்கள் தங்களின் உற்றார் உறவினர் உள்ளிட்ட பிற மனிதர்கள் எவரும் அறியாதவாறு, காட்டின் அடர்ந்த பகுதிக்குள் சென்று ஏழு நாட்கள் மறைவாகத் தங்கி வாழ்கின்றனர். இந்த ஏழு நாட்களும் வேட்டைப் பொருட்களையோ, சமைத்த உணவுகளையோ உண்ணாமல், காடு இயற்கையாகத் தங்களுக்கு வழங்கும் தேன், காய், கனி மற்றும் கிழங்குகளை மட்டுமே உணவாக உட்கொண்டு தூய்மையைப் பேணுகின்றனர்.ஏழாம் நாளன்று, நாகரிக ஆடைகளைத் துறந்து, காட்டின் மர இலைகளைக் கோர்த்து உருவாக்கிய தழையாடையை உடுத்திக் கொள்கின்றனர். இது மனிதகுலத் தொடக்க காலத்துத் தொல்மரபு வாழ்வியலின் குறியீடாகும். தழையாடை அணிந்த இவ்வேழு பேரும், அருகிலுள்ள குகையின் உள்ளே காலங்காலமாகப் பாதுகாத்து வரப்படும் கும்பதேவராகக் கருதப்படும் ஏழு சுடுமண் பானைகளை அணுகுகின்றனர்.அப்புனிதப் பானைகளுக்கு, காட்டிலிருந்து தாங்கள் திரட்டி வந்த இயற்கை உணவுப் பொருட்களைச் சமைக்காமல், அவற்றின் இயற்கை வடிவம் மாறாமல் அப்படியே சடங்குப் படையலாக இடுகின்றனர். படையல் இட்ட பிறகு, தெய்வ வடிவான அப்பானைகளின் முன்பாகத் தங்களின் பாரம்பரிய நடனத்தை ஆடிவிட்டு, எவருக்கும் தெரியாமல் தங்களின் குடியிருப்பிற்குத் திரும்புகின்றனர். **மாந்தர் சமூகத்தில் கமுக்கமாக நடத்தப்படும் சில சடங்குகள் திணை குடிகளாகிய பழங்குழுக்கள் இடையேயும் இனங்காணப்படுகின்றன. (பண்பாட்டு மானிடவியல், பக். 177)**

ஆலுக்குறும்பர்களின் இந்தக் 'கும்பதேவர் வழிபாடு' என்பது முற்றிலும் சமயம் சார்ந்த ஒரு கமுக்கச் சடங்காகும். சமைக்காத இயற்கை உணவுப் படையல், தழையாடை, குகை வழிபாடு மற்றும் ஏழு சுடுமண் பானை மரபு ஆகிய கூறுகள் — மனித நாகரிகம் சமைக்கக் கற்றுக்கொள்வதற்கும், ஆடைகளை நெய்வதற்கும் முந்தைய 'தொல்-மானுடப் பண்பாட்டு

Volume 6, Issue 2, May 2026 E-ISSN: 2583-0880
MLA, DOAJ Indexed

நிலையை' இன்றுவரை எச்சமாகத் தாங்கி நிற்கும் அரிய ஆன்மீகப் பதிவாகும். ஆலுக்குறும்பர் பழங்குடிகளின் வழிபாட்டு மரபில், தெய்வத்தின் ஆற்றலையும் ஆன்மாவையும் ஓவியக் கலை வழியே அழைக்கும் தனித்துவமானதொரு தொல்சடங்கு நிலவுகிறது. இச்சமூகத்தின் பூசாரி, ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட நன்னாளில், தமது வீட்டுச் சுவரில் ஏற்கனவே வரையப்பட்டு, வெள்ளை பூசி மறைக்கப்பட்டுள்ள தங்களின் இனக்குழுத் தெய்வ உருவத்தின் வரைகோடுகளைக் கண்டறிந்து, அதன் மேலேயே மீண்டும் வர்ணம் தீட்டுகிறார்.

இவ்வாறு வரைகோடுகளை மறுவடிவம் செய்வதன் வாயிலாக, அந்தச் சுவர் ஓவியத்திற்குள் வதியும் தெய்வத்தின் ஆன்மாவை மீண்டும் உயிர்ப்பித்து, அதற்குப் புது ஆற்றலைத் தருகின்றனர் என்பது இவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

இந்த மறுஉயிர்ப்புச் சடங்கு, அதன் ஆற்றல் வீணாகக் கூடாது என்ற அசாத்திய ஆன்மீக அறிவியல் கோட்பாட்டைக் கொண்டுள்ளது.தெய்வீக ஆற்றல் ஆவாகனம் செய்யப்பட்ட சடங்கின் மறுநாளே, பூசாரி அந்தத் தெய்வ உருவத்தின் மீது முன்போலவே மீண்டும் வெள்ளை பூசி அதனைச் சுவருக்குள் மறைத்து விடுகிறார். தெய்வ உருவம் எந்நேரமும் வெளிப்படையாகத் தெரிந்தால், அதனுடைய பேராற்றல் உலகியல் காரணங்களால் தேவையின்றி வீணாகிவிடும் என்றும், வெள்ளை பூசி மறைப்பதன் மூலமே அத்தெய்வத்தின் புனித ஆற்றலைச் சுவருக்குள் பத்திரமாகச் சேமித்துக் காக்க முடியும் என்றும் ஆலுக்குறும்பர்கள் நம்புகின்றனர். உலகப் பழங்குடிகளின் கலை மரபில், ஓவியங்கள் என்பவை வெறும் அழகியல் கூறுகள் அல்ல; அவை தெய்வங்களின் நடமாடும் உடல்களாகக் கருதப்படுகின்றன. தேவைப்படும் போது மட்டும் ஆற்றலை வெளிப்படுத்தி, பின் அதனை ரகசியமாக மூடி வைக்கும் ஆலுக்குறும்பர்களின் இந்த 'மறைத்தல் சடங்கு', அவர்களின் மிக உன்னதமான ஆன்மீகச் சமநிலையைப் பறைசாற்றுகிறது.

**பளியர் பழங்குடியினரின் பளிச்சியம்மன் வழிபாட்டு மரபு**

பளியர் பழங்குடியினரின் வாழ்வியலும் சமூக விழுமியங்களும் அவர்களின் முதன்மைத் தெய்வமான **பளிச்சியம்மன்** வழிபாட்டை மையமிட்டே சுழல்கின்றன. தங்களின் வாழிடமான வனப்பகுதிகள் யாவும் பளிச்சியம்மனின் எல்லைக்கு உட்பட்டது என்று நம்பும் இச்சமூகத்தினர், அத்தெய்வத்தின் மீது அளப்பரிய பற்றுதலும் அதே வேளையில் ஆழமான அச்சமும் கொண்டுள்ளனர்.

> **பளியர்கள் பளிச்சி என்னும் தெய்வத்தையும் ஏழு கன்னிமாரையும் தெய்வமாக வழிபடுகின்றனர். பளிச்சி கோயில் பாறையில் சிறிய கருங்கல் நடப்பட்டு பாறையை சுற்றிலும் மண் திட்டுப் போடப்பட்டு முழங்கால் அளவு சுவரும் எழுப்பப்பட்டு காணப்படுகிறது. அதனையே அவர்கள் பளிச்சி கோயிலாக வழிபடுகின்றனர். (ஆன்டிஷா, ம., மற்றும் ஜோ. பென்னி. பக். 04)**

பளிச்சியம்மன் வழிபாட்டின் பின்னணியில் தனித்துவமான குலக் கோட்பாடுகளும் அறநெறிகளும் காணப்படுகின்றன.

> **பளிச்சியம்மன் தன் பிள்ளைகளை ஒருபோதும் தனித்துப் போக விடுவதில்லை.அப்படிப் போகும் பிள்ளைகள் ஒரு வகையில் பளிச்சியம்மனை இழிவு செய்துவிட்டவர்களாகவே பார்க்கப்படுகிறார்கள். (கானகன், பக். 76)**

காட்டின் நெறிமுறைகளிலிருந்து பிறழ்ந்து தவறு செய்பவர்களைப் பளிச்சியம்மன் தன் தெய்வீக ஆற்றலால் தண்டிப்பாள் என்ற அச்சம் இவர்களது சமூக ஒழுக்கத்தைக் காக்கும் அரணாகத் திகழ்கிறது.

பூதநாச்சி, சடச்சியம்மன், வடக்கத்தியம்மன், தெக்கத்தியம்மன் ஆகிய பெண் தெய்வங்களும்; சடயன், மொட்டையன், மூக்கணக் கருப்பன் ஆகிய ஆண் தெய்வங்களும் பளியர்களின் வழிபாட்டு முறைக்குள் அடங்குவர்.

> **தை பௌர்ணமி, சித்ரா பௌர்ணமி, வைகாசி பௌர்ணமி உள்ளிட்ட முழுநிலவு நாட்களைப் பளியர்கள் தங்களின் வழிபாட்டிற்குரிய 'கும்பிடு காலம்' என்று அழைக்கின்றனர். இவை தவிர, பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை கூட்டு வழிபாடாகக் கொண்டாடப்படும் 'பன்னிரு தெய்வ வழிபாடு' இவர்களிடம் வழங்கும் மிக முக்கியத் திருவிழாவாகும். (பண்பாட்டு ஆய்வியல், பக். *268*)**

புவியியல் எல்லைகளையும் தாண்டி பளியர்களை ஒன்றிணைக்கும் சமூகக் கட்டமைப்பாக இவர்களின் வழிபாட்டுத் தலம் விளங்குகிறது. ஆகமலை, நவமலை, நாகமலை, வெள்ளிமலை ஆகிய மலைப் பகுதிகளில் சிதறி வாழும் பளியக் குடிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து 'தவளை நாடு' என்று அழைக்கப்படுகிறது. இத்தவளை நாட்டின் கட்டுப்பாட்டில் இருக்கும் முப்பது கிராமங்களைச் சேர்ந்த பளியர் பழங்குடிகளும் பளிச்சியம்மனையே தங்களின் பொதுவான குலதெய்வமாக ஏற்று வழிபடுகின்றனர். இக்கோயில் கம்பத்திற்கு மேலாக, அடர்ந்த காட்டிற்குள் அமைந்துள்ளது.ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் பளிச்சியம்மனுக்குச் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. குலதெய்வ வழிபாட்டிற்காகப் பல்வேறு கிராமங்களிலிருந்து மக்கள் இப்புனிதக் காட்டில் ஒன்று கூடும் அந்தத் தருணங்களில்தான், தங்களின் சமூகம் சார்ந்த மிக முக்கியமான வாழ்வியல் மற்றும் பஞ்சாயத்து முடிவுகளை விவாதித்து ஒருமனதாக எடுக்கின்றனர். பழங்குடியின ஆய்வுகளில், வழிபாட்டுத் தலங்கள் என்பவை வெறும் ஆன்மீக இடங்கள் மட்டுமல்ல; அவை சிதறி வாழும் குடிகளை ஒன்றிணைக்கும் 'சமூகப் பண்பாட்டுப் பேரவைகளாக' உருப்பெறுவதை இவர்களின் தவளை நாட்டு முப்பது கிராமக் கூட்டமைப்பும், சித்திரைத் திருவிழா மரபும் மிகத் துல்லியமாகப் பறைசாற்றுகின்றன.

**தொகுப்புரை**

பழங்குடி மக்களின் வழிபாட்டு முறைகள் என்பவை மூடநம்பிக்கைகளின் தொகுப்பல்ல. மாறாக, அவை காடு மற்றும் பல்லுயிர்த் தன்மையைப் பாதுகாக்கும் உன்னத நோக்கம் கொண்டவை. பகிர்ந்துகொள்ளுதல், இயற்கைக்கு நன்றியுணர்வோடு இருத்தல், சமூகப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுதல் ஆகிய உன்னத கூட்டுப் பண்பாட்டு விழுமியங்களின் வாழ்வியல் சான்றுகளாக விளங்கும் இத்தகைய தொல் சடங்குகளை ஆவணப்படுத்துவதும் பாதுகாப்பதும் இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையாகும்.

**குறிப்புகள்**

[1] ஆன்டிஷா, ம., மற்றும் ஜோ. பென்னி. “கொ. மா. கோதண்டம் படைப்புகளில் பளியர் இனவரவியல்.” *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்*, தொகுதி. 5, எண். 2, ஜனவரி 2023, ப. 28. DOI: 10.5281/zenodo.7591259.

[2] ஆட்டனத்தி. *பால் கூடாரம்.* தாமரை பப்ளிகேஷன்ஸ், 2020.

[3] ஆட்டனத்தி. *வனம்.* எதிர் வெளியீடு, 2018.

[4] சந்தியா, எஸ்., மற்றும் பலர். “சூழலியல் பெண்ணிய நோக்கில் சோளகர் தொட்டி.” *தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்வுதழ்,* தொகுதி. 12, எண். 1, ஜூன் 2026, ப. 297. DOI: 10.63300/tm12012026.22.

[5] சரவணகுமார், லஷ்மி. *கானகன்.* எழுத்து பிரசுரம், 2019.

[6] சுரேஷ், பெ. "வெட்டக்காடு இருளர்களின் வழிபாட்டு முறைகள்." *பதிவுகள்* (Geotamil), 27 ஏப்ரல் 2019. www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/5093-2019-04-27-05-43-39 அணுகப்பட்டது 25 மார்ச் 2026.

[7] நஞ்சப்பன், ந. "பழங்குடியினர் பண்பாடு." *கண்ணோட்டம்*, 10 பிப். 2008. www.kannottam.com/2008/02/blog-post_4850.html?m=1 அணுகப்பட்டது 25 மார்ச் 2026.

[8] பாரதி, பக்தவத்சல. *தமிழக பழங்குடிகள்*. அடையாளப் பதிப்பகம் (ICR), 2003.

[9] பாரதி, பக்தவத்சல. *பண்பாட்டு மானிடவியல்*. மெய்யப்பன் பதிப்பகம், 2009.

[10] பாலமுருகன், சு. *சோளகர் தொட்டி*. எதிர் வெளியீடு, 2015.

[11] பாலமுருகன், ச. "பழங்குடி மதிப்பீடுகள் நம்பிக்கைகள்." *உங்கள் நூலகம்*, ஜனவரி-பிப்ரவரி 2008. www.keetru.com/ungal_noolagam/jan08/balamurugan.php அணுகப்பட்டது 25 மார்ச் 2026.

[12] மகேசுவரன், சி. *பண்பாட்டு ஆய்வியல் (பண்பாட்டியல் குறித்த முழுதளாவிய பார்வை)*. பாரதி புத்தகாலயம், 2023.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.